30th March 1959]

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எத்தனையோ தவறான பாதைகளில் ஒரு சில மக்கள் செல்லுகிறார்கள். அதை எல்லாம் கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளும் வகையிலே போலீஸார் கண்காணித்து வருகிறார்கள்.

Local Fund Dispensary at Jayankondan

* 1066 *Q*.—SRI K. R. VISWANATHAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government have received any representation from the villagers of Andimadam, Udaiyarpalayam taluk, Tiruchirappalli district, requesting the transfer of the Local Fund Dispensary from Jayankondan to Andimadam?

THE HON. SRI M. A. MANICKAVELU : A representation has been received from the President, Mandala Congress Committee, Andimadam.

SRI K. R. VISWANATHAN : அதன் மேல் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது ?

THE HON. SRI M. A. MANICKAVELU : ஸ்தல ஸ்தாபன ஆதிக்கத்தில் இருந்த ஆஸ்பத்திரி ஜயங்கொண்டான் என்ற ஊரில் இருக்கிறது. அதை அரசாங்கம் எடுத்துக்கொண்டிருக்கிறது இப்போது. எந்த இடத்திற்கு மாற்ற வேண்டுமென்று சொல்லுகிறார்களோ அந்த இடம் இங்கிருந்து 6, 7 மைலில்தான் இருக்கிறது. இப்போது இந்த ஊரிலிருந்து பஸ் போக்கு வரத்து எல்லாம் இருக்கிறது. இந்த இடத்திலே இருப்பதே சௌகரியம். அதைச் சுற்றி இருக்கும் கிராமங்களுக்கு எல்லாம் உதவியாக இருக்குமென்பதுதான் சர்க்காருடைய அபிப்பிராயம்.

Amount allotted for the college education of Backward Class and Harijan students in North Arcot District

* 1067 *Q*.—SRI V. K. KRISHNAMURTHY : Will the Hon. the Minister for Works be pleased to state the amount allotted for (i) Backward Communities, and (ii) Harijans for study in Government (Arts and Professional) Colleges in North Arcot district in the years 1957 and 1958?

THE HON. SRI P. KAKKAN : A statement [a] is placed on the table of the House.

SRI V. K. KRISHNAMURTHY : தலைவர் அவர்களே 1957–58-ம் ஆண்டில் ஹரிஜனங்களுக்கு வேண்டி 23,315 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 1958–59-ம் ஆண்டில் 36,719 ரூபாயாக வளர்ந்திருக்கிறது கண்டு பாராட்டுவது மாத்திரமல்லாமல் பின்தங்கிய வகுப்பினர்களுக்காக 1957–58ம் ஆண்டில் 91,650 ரூபாய் ஒதுக்கப்பட்டது, 1958–59-ம் ஆண்டில் 51,963 ரூபாயாகக் குறைந்திருக்கக் காரணம் என்ன ? இந்த அளவுக்கு முன்னேற்றம் அடைந்திருக்கிறார்கள் என்று குறிப்பிடுகிறதா ? இந்த அளவுக்குக் குறைந்து போவதற்கு போதிய மாணவ மாணவிகள் இல்லை என்பதா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : என்னிடத்தில் இதைப்பற்றி தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாகக் கேள்வி போட்டால் பதில் சொல்லுகிறேன்.

---

a Printed Appendix III on page 929 infra.

[30th March 1959

SRI A. GOVINDASAMY : 1958–59-ம் ஆண்டில் ஆதிதிராவிட மாணவர்களுக்கும், பிற்பட்ட மாணவர்களுக்கும் ப்ரொபஷனல் காலேஜில் படிப்பதற்கு சகாய நிதி ஒதுக்கவில்லை. இதனுடைய காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அங்கத்தினர் கேட்ட கேள்விக்குத் தகுந்தவாறு பதிலளிக்கப்பட்டிருக்கிறது. இதற்குத் தனியாகக் கேள்வி போட்டால்தான் பதில் சொல்ல முடியும்.

SRI K. VINAYAKAM : ஸார், பிற்பட்ட இனத்தவர்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய மானியம் ஒரு வருஷத்தில் 91,000 ரூபாய். மறு வருஷத்தில் அது குறைந்து 51,000 ரூபாயாக இருக்கிறது.

MR. SPEAKER : The same question was put by another hon. Member and was answered by the Hon. Minister.

SRI K. VINAYAKAM : What was the answer, Sir?

MR. SPEAKER : The Hon. Minister wanted a separate question to be put.

THE HON. SRI P. KAKKAN : சபாநாயகர் அவர்களே, 1958–59-ல் ஜாஸ்தி மாணவர்கள் இல்லாமலிருந்திருந்தால் அதிகமாகக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். ஏதாவது ஒரு தகுந்த காரணத்தினால்தான் இம் மாதிரி இருக்கும். அதற்குத்தான் தனியாகக் கேள்வி போட்டால் பார்த்துச் சொல்லுகிறேன் என்று நான் பதில் சொன்னேன்.

Quantity of electrical energy used in the State

* 1068 *Q.*—SRI N. R. THIAGARAJAN : கனம் மின்சார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

தற்போதைய சென்னை ராஜ்யத்தில் எத்தனை கிலோ வாட் (kilowatts) மின்சாரம் உபயோகிக்கப்படுகிறது ?

THE HON. SRI V. RAMAIAH : 1,155 million units during 1958.

SRI N. R. THIAGARAJAN : 1947-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 15-ம் தேதியன்று எவ்வளவு இருந்தது ?

MR. SPEAKER : How can the Hon. Minister answer the question? The hon. Member may put a separate question.

Brick Makers' Co-operative Societies in North Arcot District

*1069 *Q.*—SRI S. M. ANNAMALAI (on behalf of SRI M. P. SARATHI) கனம் உள் விவகார அமைச்சர் அவர்கள் தயவு செய்து பதிலளிப்பாரா—

(அ) வட ஆற்காடு மாவட்டத்தில் செங்கல் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் எவ்வளவு இருக்கின்றன ?

(ஆ) அந்தச் சங்கங்களின் முதலீடு (Working Capital) எவ்வளவு ?

(இ) அரசாங்கம் கடனாகவும், உதவி நிதியாகவும் அளித்த தொகை எவ்வளவு ?

(ஈ) 1958-ம் ஆண்டில் அந்தச் சங்கங்களின் உற்பத்தி விற்பனை லாபம் எவ்வளவு ?